## அயல்நாட்டிலிருந்து அன்பு உடன்பிறப்புகளுக்கு..

# தமிழ் மணம் வீசிய ஜெர்மனி

## உங்களில் ஒருவன் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

**கடல் பிரித்தாலும் மொழி இணைக்கும்**

ஆகஸ்ட் 31 மாலையில் நம் தமிழ்ச் சொந்தங்களுடனான சந்திப்பு நேரம். ஜெர்மனியில் வசிக்கும் தமிழர்களுடனான சந்திப்பு என்றுதான்




நினைத்திருந்தேன். ஆனால், ஸ்வீடன், நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் 16 மாநிலங்களைச் சேர்ந்த தமிழர்களும் அந்தச் சந்திப்பிற்கு வந்திருந்தனர். கழகத்தின் சார்பில் தம்பி டி.ஆர்.பி.ராஜா செயலாளராக இருந்து தொடங்கிய NRTIA எனும் வெளிநாடு வாழ் இந்தியத் தமிழ்ச் சங்கத்தைத் தற்போது அயலக அணிச் செயலாளர் தம்பி எம்.எம்.அப்துல்லா செயலாளராக இருந்து சிறப்பாக நடத்தி வருகிறார். ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் உள்ள நமது NRTIA நிர்வாகிகள் நல்ல முறையில் ஒருங்கிணைத்திருந்தனர்.

ஐரோப்பாவில் வசிக்கும் தமிழர்களைக் காண்பதற்கு உங்களில் ஒருவனான நான் தமிழ்நாட்டிலிருந்து சென்றதால், நமது பாரம்பரிய உடையான வேட்டிசட்டை, மேல் துண்டு அணிந்து அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டபோது அங்கிருந்த தமிழர்கள் மகிழ்ந்து வரவேற்றனர். நல்லதொரு வரவேற்புரையை வழங்கினார்கள். அவர்கள் முன், நான் பேச எழுந்த போது, கடல் கடந்து வாழ்கின்ற தமிழ்ச் சொந்தங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும் என்ற எண்ணம் தான் ஏற்பட்டது.

"நில எல்லைகளும், கடல் எல்லைகளும் நம்மைப் பிரித்தாலும், மொழியும் இனமும் நம்மை இணைக்கிறது. கண்டங்களைக் கடந்துவிட்டாலும் நம்முடைய தொப்புள் கொடி அறுந்துவிடவில்லை" என்பதை அவர்கள் முன் சொன்னபோது கைதட்டி வரவேற்றனர். **"திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் வளர்ச்சிக்காக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கிறோம். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு ஓடோடி வந்து உதவுகிறோம்** என்பதைச் சொல்லி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் வகையில் முதலீடு செய்ய வாருங்கள். ஆண்டுக்கு ஒருமுறை குடும்பத்துடன் தமிழ்நாட்டுக்கு வாருங்கள். உங்கள் உறவாக – உங்கள் குடும்பத்தில் ஒருவனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்" என்ற உறுதியை அளித்தேன்.

**அயலக மண்ணில் தமிழ்க் கலை**

எந்த வெளிநாடுகளுக்கு நான் சென்றாலும் அங்கே உள்ள தமிழ்க் குழந்தைகள் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் பல வகை நடனங்கள், பாடல்கள், பறை இசை, சிலம்பம் உள்ளிட்ட பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுவது வழக்கம். அவற்றைக் கண்டு ரசிக்கும் போது உள்ளூரில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. **புதுப்புது கலை வடிவங்களை நாம் இரசித்தாலும் நம் பாரம்பரிய கலைகளை நம். குழந்தைகள் கற்றுக்கொண்டு அதை வெளிப்படுத்தும் போது மனதுக்கு மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்படுவது இயற்கை. உடன்பிறப்புகள் தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்குத் தமிழ்க் கலைகளைப் பயிற்றுவிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

ஜெர்மனியில் தமிழர்களுடனான சந்திப்பை நடத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியதுடன் ஐரோப்பாவில் தமிழ்ப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் தமிழ்ச் சங்கங்களின் சேவைகளைக் கேட்டு மகிழ்ந்து, அந்த சங்கங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினேன்.

**அன்றே வழிகாட்டியிருக்கிறார் அண்ணா**

என்னையும் தங்களில் ஒருவனாகக் கருதிய ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பா வாழ் தமிழர்கள், என்னிடமும் அருகில் இருந்த என் துணைவியாரிடமும் குடும்பம் குடும்பமாக வந்து படம் எடுத்து அன்பை வெளிப்படுத்தினர். அந்தப் படங்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு மகிழ்ந்தனர்.

**தமிழர்களுடனான சந்திப்பு நிகழ்வைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த NRTIA நிர்வாகிகளான துணை அமைப்பாளர்கள் இளந்தென்றல், ஜோசப்பைன் ரம்யா, அபிராமி, கல்வியாளர் நாககுமார் கங்கேஸ்வரன், டசல்டார்ஃப் ஜே.பி. செந்தில்குமார், மியூனிக் சத்தியமூர்த்தி,**




ஜெர்மனியில் முதலீட்டாளர்கள் மாநாடு – தொழிலதிபர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சாமிநாதன், மேன்ஹெய்ம் மோகன்ராஜ், டூயிஸ்பெர்க் சிஜூ, கொலோன் நிஷாந்த், விசாகர், டுட்லின்கன் டாக்டர் ஆதித்யா, லீப்சிக் கோபிநாத் பாலசுப்பிரமணியன், பசேல் ரேகா உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்தேன்.**

**தேவாலயமும் அறிவாலயமும்**

சந்திப்பு நிகழ்வு அரங்கிலும் மனதிலும் நிறைவடைந்த நிலையில், புகழ்



பெற்ற கொலோன் தேவாலயத்திற்குச் சென்று அதன் பிரம்மாண்டக் கட்டமைப்பைக் கண்டேன். யுனெஸ்கோ அமைப்பினால் பாரம்பரியச்சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ள அந்த தேவாலயம் பழமை மாறாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதைப் பார்த்தபோது நம் தமிழ் மண்ணின் பழங்காலக் கலைப் படைப்புகள் நினைவுக்கு வந்தன. ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த தஞ்சை பெரியகோயில் கோபுரமும், ஆழிப்பேரலையை எதிர்கொண்டு குமரி முனையில் நிற்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையும் மனதில் உயர்ந்து நின்றன.

தேவாலயத்தின் பழமையையும் பெருமையையும் பார்த்தபிறகு அறிவாலயமாகத் திகழும் கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நூலகத்திற்குச் சென்றேன். பழந்தமிழ் இலக்கிய ஓலைச்சுவடிகள், அண்ணாவின் ஓர் இரவு உள்ளிட்ட பல தமிழ்ப் புத்தகங்களின் முதற் பதிப்புகள் என 40 ஆயிரம் நூல்கள் ஆவணங்களைக் கொண்ட அந்தத் தமிழ்த்துறை மற்றும் நூலகத்தைக் காப்பாற்றும் வகையில் அதன் வளர்ச்சிக்காக திராவிட மாடல் அரசு 2021இல் ரூ. 1.25 கோடியும், கடந்த ஜூலையில் ரூ. 1 கோடியே 64 ஆயிரமும் என இரண்டு முறை நிதி அளித்துள்ளது. அந்த நிதியைச் சரியாகப் பயன்படுத்தி, ஜெர்மனியில் தமிழ்ப் பணி தொடர்கிறது என மகிழும் வகையில் தமிழ்த்துறை நூலகத்தில் பொறுப்பில் உள்ள Dr.Sven Wortmann, Mr. Sharon Nathan, Mrs.Daria Lambercht ஆகியோரின் தமிழார்வம் அமைந்திருந்தது. தமிழில் எங்களுக்கு வரவேற்பளித்து, ஓலைச்சுவடிகளைப் பராமரிப்பதில் தங்களுக்குள்ள சிரமங்களை அவர்கள் நம்மிடம் பகிர்ந்துகொண்டு, சிலவற்றைத் தமிழ்நாட்டில் பாதுகாக்கு மாறு சொல்லி வழங்கினர். அவற்றை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ஒப்படைத்துப் பாதுகாக்கும் எண்ணத்துடன் பெற்றுக் கொண்டேன்.


தமிழ் மணம் வீசிய கொலோன் பல்கலைக்கழகத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் நேரம் போனதே தெரியவில்லை. உலகின் எந்த மூலையிலிருந்தோ தமிழ் மீது ஆர்வம் கொண்டு ஆய்வில் ஈடுபடும் மொழியியல் அறிஞர்களுக்கு இந்த நூலகம் துணை நிற்பதையும், நூலகங்களின் பயனையும் தேவையையும் கருதி, நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் சென்னையில் அமைத்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் போல, திராவிட மாடல் ஆட்சியில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டிருப்பதுடன் திருச்சி, கோவை ஆகிய நகரங்களிலும் உலகத் தரத்திலான நூலகங்கள் அமைக்கப் பட்டு வருவதை எண்ணி மகிழ்ந்தபடியே கொலோன் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியே வந்தேன்.

ஜெர்மனியில் இரவு 8 மணிக்கு மேல்தான் இருட்டுகிறது. அதுவரை சூரியன் ஒளி வீசுகிறான். இருட்டும் நேரத்தில் ஹோட்டலுக்குத் திரும்பியபோது இரவு நேரத் தமிழ்நாட்டு உணவு ஏ2பி உணவகத்திலிருந்து வந்திருந்ததுடன், கடலூர் தொ.மு.ச.வின் மூத்த நிர்வாகியின் மகளான திருமதி. அகிலா நாராயணன் அவர்கள் நடத்தும் மெட்ராஸ் கபேவிலிருந்தும் சுவையான உணவு வந்திருந்தது. தமிழ்நாட்டின் கைப்பக்குவத்துடனான இரவு உணவை முடித்துக் கொண்டு உறங்கச் சென்றேன்.

**தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி**

செப்டம்பர் 1 – திராவிட மாதத்தின் முதல் நாள். கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரான தம்பி டி.ஆர்.பி.ராஜா ஆண்டுதோறும் அணியின் சார்பில் முன்னெடுக்கும் திராவிட மாதம் நிகழ்ச்சிகளைப் பற்றிய முன்னோட்டக் காணொளியை அனுப்பியிருந்தார். திராவிட மாதத்தின் முதல் நாள், ஜெர்மனி பயணத்தில் தமிழ்நாட்டிற்கு முக்கியமான நாள். முதலீடுகளை





ஈர்க்கும் நாள். கொலோன் நகரத்திலிருந்து புறப்பட்டு, டசல்டோர்ஃப் நோக்கிப் பயணித்தோம். ஒரு மணி நேர கார் பயணத்தில், நிறுவனங்கள் குறித்தும், எந்தெந்தத் துறையில் முதலீடுகளை ஈர்க்க வேண்டும், அதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் எவ்வளவு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்பதைப் பற்றியும் தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா, எனது செயலாளர் உமாநாத் ஐ.ஏ.எஸ். ஆகியோருடன் ஆலோசித்தபடியே சென்றேன்.

**டசல்டோர்ஃப் நகரில் ஐந்து நிறுவனங்களுடன் தனித்தனிச் சந்திப்புகள். முதல் நிறுவனமாக உலகப் புகழ்பெற்ற பி.எம்.டபிள்யூ கார் நிறுவனத்துடனான சந்திப்பு. நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது, பி.எம்.டபிள்யூ காரில் கையெழுத்திட்ட படத்தை அந்த நிறுவனத்தினர் எனக்குப் பரிசாக அளித்தபோது நெகிழ்ந்தேன்.** பி.எம்.டபிள்யூ, நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகள் குறித்த ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் நடைபெற்றன. அந்த நிறுவனத்தைத் தொடர்ந்து இ.பி.எம் பாப்ஸ்ட், நார்ரீம்ஸ், நார்டெக்ஸ் ஆகிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

அவர்களிடம் நான், சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர் மாநாடு 2024-இல் ஒப்பந்தம் போடப்பட்டு, அடுத்த சில மாதங்களில் தூத்துக்குடியில் அடிக்கல் நாட்டி, ஒன்றரை ஆண்டுக்குள் உற்பத்தியைத் தொடங்கிய வியட்நாம் நாட்டின் வின்ஃபாஸ்ட் நிறுவனத்திற்கு அரசு தரப்பிலான ஒத்துழைப்பு, அவர்களின் மின்வாகன உற்பத்திக்கேற்ற திறன்மிகு பணியாளர்களைச் சொந்த மாவட்டத்திலேயே உருவாக்கித் தந்தது, முதல் கார் விற்பனையை நானே நேரில் சென்று தொடங்கி வைத்தது உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் முழுமையானஒத்துழைப்புகளைவிளக்கினேன். மிகுந்த நம்பிக்கையுடன் அவர்கள் முதலீடு செய்ய முன்வந்தனர். தமிழ்நாட்டிற்கு 3,201கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்ப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**கார் மியூசியத்தில் நினைவலைகள்**

மதிய உணவு நேரம் நெருங்கியிருந்தது. தொழில் நிறுவனங்களுடன் சந்திப்பு நிகழ்ந்த இடத்திற்கு அருகில் ஒரு கார் மியூசியம் இருப்பதை அறிந்ததும் எனக்கு ஆர்வம் அதிகமானது. பழைய கார்களின் அருங்காட்சியகம் அது. எனக்குப் பழைய நாட்களின் நினைவுகள் வந்தன. **இளைஞரணி தொடங்கப்பட்டு அதன் கிளைகளை மாநிலம் முழுவதும் தொடங்கியபோது. ஒவ்வொரு ஊராக கார்ப்பயணம்தான். அப்போதைய இளைஞரணி மாநில நிர்வாகிகள் அனைவரும் ஒரே காரில்தான் நெருக்கியடித்து உட்கார்ந்து பயணிப்போம். கார் ஓட்டுவது நான்தான். இரவு நேரத்தில் மற்ற நிர்வாகிகள் காரிலேயே தூங்கி விடுவார்கள். எனக்குக் காரில் ஏறினால் அப்போதும் இப்போதும் தூக்கம் வராது. அதனால் விடிய விடிய கார் ஓட்டிச் செல்வேன்.** அப்போதிருந்த கார்களை விட இப்போது அதிநவீன கார்கள் வந்து விட்டாலும், பழைய கார்கள் என்றால் இளமையான நினைவுகள்தான்.

கார் மியூசியத்தில் பென்ஸ் கம்பெனியின் உலகின் முதல் கார் இருந்தது. மூன்று வீல்களை மட்டுமே கொண்ட அந்தக் காரை இயக்கிப் பார்த்தேன். இங்கிலாந்து அரசர் பயன்படுத்திய கார், இளவரசர் பயன்படுத்திய முதல் ரேஸ் கார், ரஷ்ய அதிபர் பயன்படுத்திய கார் உள்ளிட்ட பல நிறுவனங்களின் பல வகைக் கார்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியையும், வாழ்க்கை விரைந்து பயணிப்பதையும் நினைவுபடுத்தும் சிறப்பான அந்த மியூசியத்தைப் பார்த்துவிட்டு, மதிய உணவுக்குப் பிறகு முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் புறப்பட்டேன்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்